# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102053

1. District : மாவட்டம் சிவகங்கை PS: காவல்நிலையம் இலஞ்ச ஒ.த.பி [illegible] Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 08/18 Date: நாள் 25-06-2018
2. (i) Act சட்டம்: இ.த.ச Sections பிரிவுகள்: 120(b), 466, 468, 471,
   (ii) Act சட்டம்: ஊ.த.சட்டம் 1988 Sections பிரிவுகள்: 109 IPC மற்றும் 13(2)
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 13(1)(c)(d) of PC Act 1988
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 2006 Date to : நாள் வரை 2011
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17-10-2012 Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
   - விரிவான விசாரணை [Detailed Enquiry] செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   நகராட்சி [illegible] சாலை பூங்கா, காரைக்குடி சுமார் 60 கி.மீ வடகிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் லெட்சுமணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் இருப்பன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 49 (d) Nationality நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி ரோஸ் இல்லம், 14, அம்பாள் மணியபுரம் 1-வது வீதி, காரைக்குடி, சிவகங்கை
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1)திரு.N.ரவிச்சந்திரன், முன்னாள் நகராட்சி ஆணையாளர், காரைக்குடி நகராட்சி, சிவகங்கை மாவட்டம். 2)திரு.S.மணி, முன்னாள் நகராட்சி பொறியாளர், I/c.நகராட்சி ஆணையர் காரைக்குடி நகராட்சி, சிவகங்கை மாவட்டம், 3)திருமதி.K.மாலதி, முன்னாள் நகரமைப்பு அலுவலர், i/c. இளநிலை பொறியாளர், காரைக்குடி நகராட்சி, சிவகங்கை மாவட்டம். 4)திரு.செந்தில்குமார், S/o.தினகரன், பதிவு பெற்ற ஒப்பந்ததாரர், காரைக்குடி நகராட்சி, சிவகங்கை மாவட்டம்.
8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

விரிவான விசாரணை (Detailed Enquiry) செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / கைவிடுள்ள சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—Nil—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / கைவிடுள்ள சொத்துக்களின் மொத்த மதிப்பு —Nil—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —Nil—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம், (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சிவகங்கை சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு சட்டம் 1988) நீதிமன்றம் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 25.06.2018–ம் தேதி 15.30 மணிக்கு நான் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பொறுப்பில் இருந்தபோது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக நமுனா எண். DE100/2013/LB/SG. நாள் 21.06.2018ல் கண்ட உத்தரவின்படி காலம் 7ல் கண்ட எதிரிகள் மீது இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 120(B), 465, 468, 471 மற்றும் 109 இ.த.ச மற்றும் 13(1)(c) மற்றும் (d) உ/இ 13(2) ஊழல் தடுப்பு சட்டம், 1988ன் படி சிவகங்கை ஊ.த.க.பிரிவு குற்ற எண்.05/2018-ன்படி கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சுப்பிரமணியபுரம் 1–வது வீதியைச் சேர்ந்த திரு.லெட்சுமணன் என்பவரது புகார்மனு சம்பந்தமாக சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநர், இயக்குநரக நமுனா எண். DE100/2013/LB/SG,

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed A. Peter... Rank Inspector to take up the investigation / Refused Investigation / transferred to PS V & AC, Sivaganga on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(signature) 25/06/18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

25-06-2018 at 16.30 hrs

Name: பெயர் M. [illegible]
Rank: நிலை காவல் கண்காணிப்பாளர், No. எண் ..........
ஊ.த.க. பிரிவு,
சிவகங்கை.

நாள் 13.09.2013 உத்தரவின்படி சிவகங்கை மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.A.கண்ணன் அவர்களால் 17.10.2013ல் விரிவான விசாரணை பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டு பின்பு அவர் பணிமாறுதலில் சென்றதால் இந்த விரிவான விசாரணை என்னால் தொடரப்பட்டு கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகள் கண்டறியப்பட்டுள்ளது.

1–வது எதிரி திரு.N.ரவிச்சந்திரன் என்பவர் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி நகராட்சியில் ஆணையாளராக கடந்த 16.07.2009 முதல் 06.07.2011 வரை பணியாற்றி தற்போது திருச்சி மாநகராட்சி ஆணையராக பணியாற்றி வருகிறார். 2–வது எதிரி திரு. S.மணி என்பவர் மேற்படி நகராட்சியில் 01.08.2007 முதல் நகராட்சி பொறியாளராகவும் 06.07.2011 முதல் 21.01.2012 வரை நகராட்சி பொறியாளராகவும் மற்றும் நகராட்சி ஆணையாளர் பொறுப்பை கூடுதலாக கவனித்து வந்துள்ளார். தற்போது 2–வது எதிரி திரு.S.மணி கோயம்புத்தூர் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் செயற்பொறியாளராக பணியாற்றி வருகிறார். 3–வது எதிரி திருமதி.K.மாலதி மேற்படி நகராட்சியில் 08.09.2010 முதல் 31.03.2015 வரை நகரமைப்பு அலுவலராகவும் மற்றும் இளநிலை பொறியாளர் பொறுப்பை கூடுதலாக கவனித்து வந்துள்ளார். தற்போது 3வது எதிரி திருமதி.K.மாலதி புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை நகராட்சியில் நகரமைப்பு அலுவலராக பணியாற்றி வருகிறார். இவர்கள் ஊழல் தடுப்பு சட்டம், 1988 பிரிவு 2(c)ன்படி பொது ஊழியர் ஆவார்கள்.

4வது எதிரி திரு.தி.செந்தில்குமார் த/பெ.தினகரன் என்பவர் காரைக்குடி நகராட்சியில் கடந்த 2011ல் பதிவுபெற்ற ஒப்பந்ததாரராக இருந்துள்ளார். இவர் தனிநபர் ஆவார்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை, அரசாணை (நிலை) எண்.69, நாள் 04.05.1998ன்படி i) தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் 40 சதவிகிதத்தினர் நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர் என்றும், இப்பகுதிகளில் நகராட்சிகளின் சேவைப்பணிகளை பயனுள்ள விதத்தில் திறம்பட வழங்குதல் நகராட்சியின் கடமையாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ii) அரசு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் சேவைப்பணிகளை திறம்பட நிறைவேற்றியுள்ள கருவிகளில் ஒன்று தனியார்மயமாக்கல் எனக் கருதப்படுகிறது. சேவைப் பணிகளை பிரித்து அவற்றில் தனியார்மயமாக்கப்பட்டால் பயன்விளைவிக்கக்கூடிய பணிகளை மட்டும் தனியாரிடம் ஒப்படைப்பது சாலச் சிறந்தது என்றும், அத்தகைய தனியார்மயமாக்கல், எந்தவகையிலும்

தனியார் துறையின் ஏகபோகத்திற்கு வழியேற்படுத்த கூடாது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. iii) கொள்கை குறிப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர்/பேரூராட்சி ஆணையர் மூலமாக அரசுக்கு அவ்வப்போது அறிக்கை அனுப்புமாறும் அவர்கள் கேட்கப்படுகிறார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. iv) மேலும் மேற்படி அரசாணையுடன் இணைக்கப்பட்ட கொளகை குறிப்பில் முதன்மை பணிகளாக 1)திடக்கழிவு மேலாண்மை, 2) தெருவிளக்குகள் பராமரிப்பு, 3) சாலைகள் மற்றும் பாலங்கள் பராமரிப்பு மற்றும் 4) குடிநீர் மற்றும் துப்புரவுப் பராமரிப்பு ஆகிய பணிகளையும் மற்றும் இதர சேவை பணிகளாக 1) பூங்காக்கள், 2)வணிக வளாகங்கள் மற்றும் 3) சந்தைகள் ஆகிய பணிகளையும் மேற்படி அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விரிவான விசாரணையில் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகராட்சியில், காரைக்குடி முடியரசன் சாலையில் உள்ள நகராட்சி பூங்காவில் 2011–2012–ம் ஆண்டில் 4வது எதிரி திரு.செந்தில்குமார், நகராட்சி பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் (பதிவு எண்.9/2016–2017) என்பவருக்கு மேற்படி பூங்கா பராமரிப்பு பணிக்கு 25.02.2011ல் ந.க.எண்.8085/2011/இ1–ன்படி வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை, அரசாணை(நிலை) எண்.69, நாள் 04.05.1998–ன்படி மேற்படி பூங்கா பராமரிப்பு பணி சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகள் குறித்து எந்தவொரு அறிக்கையும் 1-வது எதிரி திரு.ரவிச்சந்திரன், காரைக்குடி நகராட்சி ஆணையாளராக பணியாற்றியபோது சென்னை, நகராட்சி நிர்வாகம் ஆணையர் அவர்களுக்கு அனுப்பாமல் மேற்படி பூங்காவினை பராமரிப்பு செய்யவேண்டி தனியாரிடம் ஒப்படைப்பதற்கு பொதுப்பணித்துறையின் 2010–2011 Schedule of Rates-ன்படி 3–வது எதிரி திருமதி.மாலதி என்பவரால் ஒரு வருடகாலத்திற்கு 2011 முதல் 2012 வரை உள்ள காலகட்டத்தில் பூங்கா பராமரிப்பிற்கு Detailed Estimate ரூ.10,74,000/–க்கு 01.02.2011 அன்று தயார் செய்யப்பட்டுள்ளது. 2–வது எதிரி திரு.மணி 01.02.2011 அன்று ரூ.10,74,000/–க்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி கையொப்பம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பூங்காவில் மின்மோட்டார்கள், மின்விளக்குகள் இயக்குவதற்கும், நவீன கழிப்பிடம் மற்றும் பூங்கா பகுதியை சுத்தம் செய்வதற்கும், தோட்டங்கள் பராமரிப்பு செய்வதற்கும் தயாரிக்கப்பட்ட Estimate–ன்படி வருடாந்திர பராமரிப்பு செலவாக ரூ.10,74,000/–க்கு ஒப்பந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்வதற்கு காரைக்குடி நகராட்சியில்

01.02.2011 ஆம் தேதி நகர்மன்ற பொருள் வைக்கப்பட்டு நகர்மன்றத்தால் முன்அனுமதி வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்படி நகராட்சி தீர்மானத்தின்படி 4-வது எதிரியின் ஒப்பந்தபுள்ளி ஏற்கப்பட்டு மேற்படி பூங்கா பராமரிப்பு பணிக்கு 25.02.2011-ல் 4-வது எதிரி செந்தில்குமாருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வேலை உத்தரவில் குறிப்பட்டுள்ளபடி 7 தினங்களுக்குள் எந்தவொரு ஒப்பந்த பத்திரமும் 4-வது எதிரி திரு.செந்தில்குமார் பதிவு செய்துகொள்ளவில்லை. 4-வது எதிரி செந்தில்குமார் என்பவரால் 23.05.2011வரை எந்தவொரு ஒப்பந்த பத்திரமும் பதிவு செய்யப்படாத நிலையில் 2012-2013 மற்றும் 2013-2014 ஆகிய ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணியை 4-வது எதிரி மேற்கொள்வதற்கு 24.05.2011 அன்று நகர்மன்றத்தில் பொருள் வைக்கப்பட்டு நகர்மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நகர் மன்ற தீர்மான எண்.231-ன்படி 13.06.2011 அன்று 4வது எதிரிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி 17.06.2011 அன்று ஒப்பந்த உடன்படிக்கை 4-வது எதிரியுடன் போடப்பட்டுள்ளது. மேலும் 4-வது எதிரி மேற்படி பூங்கா பராமரிப்பிற்கு வேலையாட்களை வைத்து பராமரிப்பு செய்ததற்கு எந்தவொரு ஆவணமும் இல்லை. மேற்படி பூங்காவில் 4-வது எதிரி திரு.செந்தில்குமார் 16 நபர்களை வைத்து வேலை செய்ததாக மாதாந்திர செலவு ரசீதில் குறிப்பிட்டுள்ளார். 4-வது எதிரிக்கு வழங்கப்பட்ட 25.02.2011 மற்றும் 13.06.2011 ஆகிய வேலை உத்தரவில் குறிப்பிட்டுள்ளபடி எந்தவொரு நபருக்கும் காப்பீட்டு பணமோ EPF பணமோ 4-வது எதிரியால் செலுத்தப்படவில்லை. மேற்படி பணம் செலுத்தப்படாமல் இருந்தது பற்றி காரைக்குடி நகராட்சியால் எந்தவொரு விளக்கமும் 4-வது எதிரியிடம் கேட்கப்படவில்லை. மேலும் 25.02.2011ல் 4-வது எதிரிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதில் இருந்து மார்ச் 2011 முதல் ஜூன் 2011 வரை 4 மாதங்களுக்கு ஒப்பந்த உடன்படிக்கை போடாமலும், பின் 17.06.2011 அன்று ஒப்பந்த உடன்படிக்கை போடப்பட்டதில் இருந்து ஜூலை 2011 முதல் டிசம்பர் 2011 வரை 6 மாதங்களுக்கும் சேர்த்து மொத்தம் 10 மாதங்களுக்கு மேற்படி பூங்கா பராமரிப்பு செலவுக்கென்று மாதம் Rs.89,000/- வீதம் 01.03.2011 முதல் 31.12.2011 வரை மொத்தம் Rs.8,90,000/-ம் (Per month Rs.89,000 X 10 Month = 8,90,000-/) 3-வது எதிரி திருமதி.மாலதி, முன்னாள் நகரமைப்பு அலுவலர் மற்றும் பொறுப்பு இளநிலை பொறியாளரால் 4-வது எதிரி திரு.செந்தில்குமாருக்கு பரிந்துரை செய்யப்பட்டு, 2-வது எதிரி திரு.மணி, முன்னாள் நகராட்சி பொறியாளர் மற்றும் பொறுப்பு நகராட்சி ஆணையாளரால் Sanction செய்யப்பட்டு 4-வது எதிரி திரு.செந்தில்குமாருக்கு பூங்கா பராமரிப்பிற்காக மார்ச் 2011 முதல் ஜூன் 2011 வரை ரூ.3,56,000/- 20.07.2011 அன்றும், ஜூலை 2011க்கு ரூ.89,000/- 12.08.2011 அன்றும், ஆகஸ்ட் 2011ல் ரூ.89,000/- 20.09.2011

அன்றும், செப்டம்பர் 2011ல் ரூ.89,000/– 14.10.2011 அன்றும், அக்டோபர் 2011ல் ரூ.89,000/– 22.11.2011 அன்றும், நவம்பர் 2011ல் ரூ.89,000/– 23.12.2011 மற்றும் டிசம்பர் 2011ல் ரூ.89,000/– 10.01.2012 அன்று முறைகேடாக Bill pass செய்யப்பட்டுள்ளது. இது குறித்து விபரக்குறிப்பு காரைக்குடி நகராட்சி அலுவலக குறிப்பு மற்றும் M.Book-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இதில் 2-வது எதிரி மணி மற்றும் 3–வது எதிரி திருமதி.மாலதி ஆகிய இருவரும் ஒப்பந்தப்படி 4-வது எதிரி திரு.செந்தில்குமார் பூங்கா பராமரிப்பு பணி செய்த 16 நபர்களுக்கு இன்சூரன்ஸ் பாலிசி எடுத்தாரா ? இல்லையா ? என்றும் EPF பணம் செலுத்தினாரா ? இல்லையா ? என்று பார்க்காமல் விதிமுறைகளை மீறி முறைகேடாக மேற்படி தொகையை 4–வது எதிரிக்கு பரிந்துரை செய்து அனுமதித்துள்ளார்கள். 4–வது எதிரி திரு.செந்தில்குமாருடன் மேற்படி 1 முதல் 3 எதிரிகள் கூட்டாக சேர்ந்து 4–வது எதிரி திரு.செந்தில்குமார் பூங்கா பராமரிப்பு பணி முறையாக செய்யாமல் 16 பேர்களை வைத்து பூங்கா பராமரிப்பு பணி மேற்கொண்டதாக வழங்கிய போலி Bill-யை உண்மையான ஆவணம் போல் பயன்படுத்தி ஏமாற்றி அரசுப்பணம் ரூ.8,90,000/– Sanction செய்து பிடித்தம் போக ரூ.8,80,334/–யை 1 முதல் 4 எதிரிகள் கையாடல் செய்து, அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தி குற்றமுறு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே 1 முதல் 4 வரையுள்ள எதிரிகளின் இந்த செயல்களானது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 120(B), 465, 468, 471 மற்றும் 109 இ.த.ச மற்றும் ஊழல் தடுப்பு சட்டம், 1988 பிரிவுகள் 13(1)(c) மற்றும் (d) உ/இ 13(2)ன் படி குற்றமுறு செயலில் ஈடுபட்டுள்ளார்கள்.

இவ்வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கையை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கு அனுப்பியும், ஒரு நகலை இவ்வழக்கை மேல் விசாரணை செய்வதற்காக திரு.A.பீட்டர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை அவர்களிடம் ஒப்படைத்தும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

25-06-2018
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு.
சிவகங்கை மாவட்டம்